**வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்சக்திக் கம்பனி – 2018/2019**

---

**1.1 அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்சக்திக் கம்பனியின் (''கம்பனி'') 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்கையில் நான் பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை பெற்றுக் கொண்டேன்.

நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயங்களை சுட்டிக்காட்டல்**

2016 ஆம் நிதியாண்டின் போது கம்பனியால் சம்பூர் நிலக்கரி மின் நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 4 இல் கவனத்தை செலுத்துகின்றேன். எவ்வாறாயினும் 50 மெகாவொற்றில் சூரிய சக்தி மின்நிலையமொன்றையும் 500 மெகாவொற் நிலக்கரி மின்நிலையமொன்றையும் தாபிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவிற்கமைய கம்பனி தொடர்ந்தியங்குவதாக முகாமைத்துவம் விசுவாசிக்கின்றது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரை மேற்குறித்த நிலையங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வித மேம்படுத்தலும் செய்திருக்கவில்லை.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கம்பனியின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொள்வதற்காக இருந்த போதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 14,839,412 ஆன வரிக்கு முன்னரான தேறிய நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 348,951,634 ஆக இருந்தது. ஆதலால் நிதி விளைவுகளில் ரூபா 334,112,222 ஆன நட்டத்தில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டின் விரிவான வருமானக்கூற்றுக்கு எதிராக ரூபா 343,915,606 தொகையான நடைமுறைவேலை மற்றும் மூலதன வேலைகள் பதிவழித்தல் நட்டத்தின் பாதகமான நிலைமைக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சங்கிலி இணைப்பு வேலியின் (Chain Link Fence) நிர்மாணம் ருஹுனு அபிவிருத்தி ஒப்பந்த மற்றும் பொறியியலாளர் (தனியார்) கம்பனிக்கு 2015 ஆகஸ்ட் 14 இல் ரூபா 48,282,120 அவ் ஒப்பந்தப் பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த காலப்பகுதியானது ஆறு (06) மாதங்களாக இருந்தது. ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய வேண்டிய திகதி 2016 பெப்ரவரி 13 ஆக இருந்தது. ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு 2018 மே 31 வரை 11 கால நீடிப்புக்களை வழங்கியிருந்த போதும், இவ்வறிக்கை திகதி வரை பௌதீக செயன்முன்னேற்றம் 98 சதவீதமாக இருந்தது. | முகாமையின் கருத்துரை கிடைக்கப் பெறவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தப் செயற்பாடுகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

ஆண்டின் இறுதி வரை எவ்வித செயற்பாடொன்றும் இல்லாமையால் கம்பனி உள்ளக பதவியணி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. அமைப்பு அகவிதி மற்றும் பங்குடைமை உடன்படிக்கையின் பிரகாரம் விசேட பதவிகள் காணப்பட்டன. கணக்கு பிரிவினதும் வெளிக்கள மேற்பார்வைக்காக ஏனைய மூன்று உத்தியோகத்தர்கள் வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. அதுவரை ஆட்சேர்ப்பு நடைமுறையொன்ற தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016/2017 மற்றும் 2017/2018 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் | முகாமையின் கருத்துரை கிடைக்கப் பெறவில்லை. | சுற்றறிக்கை தேவைப்பாட்டின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

**4.2 கூட்டிணைந்த திட்டமும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டமும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | முகாமையின் கருத்துரை கிடைக்கப் பெறவில்லை. | சுற்றறிக்கை தேவைப்பாட்டின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமும தயாரிப்பதற்காக கம்பனியின் முகாமைத்துவம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படா திருந்ததுடன் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மீளாய்வாண்டிற்காக கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | முகாமையின் கருத்துரை கிடைத்திருக்கவில்லை. | வேறாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபித்து அல்லது அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ள வேண்டும். |

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமையின் கருத்துரை கிடைக்கப் பெறவில்லை. | எதிர்காலத்தின் போது கம்பனிக்காக மீளாய்வாண்டிற்காக வருடாந்த பாதீட்டை தயாரிப்பதற்காக கம்பனியின் முகாமைத்துவம் தயாரிக்க வேண்டும். |